விரைந்து செய்யப்படுவர் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இனாத்துக்கான்பட்டி கிராம மக்களுடைய மீள்குடியமர்வுக்காக மாற்று இடமும் கண்டறியப்பட்டு தயார் நிலையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஓ) திருவண்ணாமலை மாவட்டம், குப்பநத்தம் அணை, மலைவாழ் மக்களுக்குப் பட்டா வழங்குதல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் எ.வ. வேலு அவர்கள், அணை கட்டுவதற்காக ஆக்கிரமிப்பு செய்திருக்கிற நிலங்களுக்குப் பதிலாக, அவர்களுக்கு வழங்கப்பட்ட குடியிருப்புகளுக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதனுடைய வகைப்பாடு என்ன என்பதை ஆராய்ந்து அறிந்து, தகுதியானவர்களுக்கெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. அவர்கள் அச்சம்கொள்ளத் தேவையில்லை. வகைப்பாடு சட்டத்திற்குட்பட்டு அது இருக்குமேயானால், அவர்களுக்குப் பட்டா வழங்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலனை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—55

(ஔ) கிள்ளியூர் தொகுதி, நீரோடி கிராமம், காணாமல் போன மீனவர்களைக் கண்டுபிடித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ராஜேஷ் குமார் அவர்கள்.

திரு. செ. ராஜேஷ் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 17 ஆம் தேதியன்று கிள்ளியூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நீரோடி துறையிலிருந்து, ஸ்டான்லி, நிகோலஸ், ராஜு, சகாயராஜ் மற்றும் ஜான் பாஸ்கோ ஆகிய 5 பேர் கொல்லம் நீண்டகரை துறைமுகத்திலிருந்து மீன் பிடிக்கச்

2019 ஜுலை 20] [திரு. செ. ராஜேஷ் குமார்]

சென்றார்கள். ஆனால், சூறைக் காற்று வீசியதால், நேற்றைய தினம் திரும்பி வரும்போது இரண்டு பேர் மட்டுமே அதிலிருந்து தப்பி, திரும்ப வந்திருக்கின்றார்கள். மீதமுள்ள மூன்று பேர் மாயமாகியுள்ளனர். அவர்களை மீட்க வேண்டுமென்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோல். . .

(அஅ) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மாற்றுத் திறனாளிகளுக்கான காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு பிரத்யேக தேர்வு நடத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள். (குறுக்கீடு) ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.*

***திரு. ஆர். நடராஜ்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* **T.N.P.S.C.** *மூலமாக நிரப்பப்படும் அரசு காலிப் பணியிடங்களில், மாற்றுத் திறனாளிகளுக்கான பணியிடங்களில் கிட்டத்தட்ட 400–க்கும் மேற்பட்ட இடங்கள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. அவற்றை நிரப்புவதற்கு பிரத்யேகமான ஒரு தேர்வு நடத்த வேண்டும் என்பது பற்றி அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி.*

(ஔ) கிள்ளியூர் தொகுதி, நீரோடி கிராமம், காணாமல் போன மீனவர்களைக் கண்டுபிடித்தல்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 15 ஆம் தேதி. . . (குறுக்கீடு) திரு. ராஜேஷ் குமார், இங்கு கவனியுங்கள். கடந்த 17 ஆம் தேதியல்ல; கடந்த 15 ஆம் தேதியன்று மேற்குக் கடற்கரைப் பகுதியைச் சார்ந்த நீரோடி என்ற மீனவக் கிராமத்திலிருந்து கண்ணாடி இழை கட்டுமரத்தில் மீன் பிடிக்கச் சென்றவர்கள் கரை திரும்பியிருக்க வேண்டும். ஆனால், எதிர்பாராத விதமாக கடலில் ஏற்பட்ட சூறாவளிக் காற்றின் காரணமாக கண்ணாடி இழை கட்டுமரம் கவிழ்ந்து, இரண்டு மீனவர்கள் கரை திரும்பியுள்ளார்கள்.*

மீதமுள்ள 3 மீனவர்கள் கரை திரும்பவில்லை. அவர்களைத் தேடும் பணிகயை மேற்கொள்ள இந்திய கடலோரக் காவல் படையினர் மற்றும் Coast Guard–*க்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது. விரைந்து தேடிக் கண்டுபிடிக்க வேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்து வருகிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. பிரின்ஸ், உட்காருங்கள். (குறுக்கீடு) திடீரென்று நீங்கள் எழுந்து நின்றீர்களென்றால் எப்படி? எல்லோருக்கும் வாய்ப்புக் கொடுக்க முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். என்னுடைய முயற்சிக்கு இடையூறு செய்தால் எப்படி? இதுவரை, மாண்புமிகு அமைச்சர்களின் பதிலை உறுப்பினர்களுக்குப் பெற்றுக் கொடுத்திருக்கிறேன். இன்னும் சிறிது நேரத்திற்கு உறுப்பினர்கள் தங்களது கோரிக்கைகள் குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து கருத்துகளைச் சொல்லலாம். சுருக்கமாகச் சொன்னால் நிறைய உறுப்பினர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க முடியும். அவற்றை மாண்புமிகு அமைச்சர்கள் குறித்துக்கொண்டு, அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பார்கள். ஆனால், இன்று நேரம் குறைவாக இருப்பதால் அவற்றுக்குப் பதில் சொல்ல நேரமில்லை என்பதைத் தெரிவித்து, உறுப்பினர்கள் சுருக்கமாகச் சொல்லி அரசின் கவனத்தை மட்டும் ஈர்க்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.*

(அஆ) கடலூர் மாவட்டம், கரும்பு விவசாயிகளுக்கான நிலுவைத் தொகையை வழங்குதல்

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்திலுள்ள எம்.ஆர். கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் கடந்த 2014 ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டு வரையில் கிட்டத்தட்ட பத்தாயிரம் விவசாயிகள் பயிர் செய்த கரும்புக்கான தொகையில் இதுவரை ரூ.40 கோடியை அரசாங்கம் பாக்கி வைத்திருக்கிறது. குறிப்பாக, இந்த ஆண்டு 928 டன் கரும்பினை நான் பயிர் செய்து, அதற்குரிய தொகை ரூ.24 இலட்சம் வழங்கப்பெற வேண்டிய நிலையில் ரூ.7 இலட்சம்தான் எனக்கு வழங்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்காக என்னுடைய நிலையைப் பற்றிச் சொன்னேன். ஆனால், ரூ.24 இலட்சம் மதிப்பீட்டிற்கு கரும்பு உற்பத்தி செய்வதற்கு ரூ.20 இலட்சம் செலவாகிறது. இலாபம் ரூ.4 இலட்சம்தான் கிடைக்கும். ஆனால், அரசாங்கத்திடமிருந்து நாங்கள்*